OS.No.613/2023 – 6.3.2025

PW1 – சக்திசபரி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமா மெக்கானிகல் இன்ஜினியரிங் படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ஹிட்டாச்சி பொக்லைன் வைத்துள்ளேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதில்லை என்றால் சரி. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. தாவாவை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதி என்னுடன் 15 பிளாட்டுகளுக்கு கிரய ஒப்பந்தம் போட்டிருந்தார், ரூ.15,00,000/– விலை பேசி ரூ.10,00,000/– முன் பணம் கொடுத்தார்கள், அதன் பின்னர் மீதி கிரய தொகையான ரூ.5,00,000/–ஐ கொடுத்து 1ம் பிரதிவாதி கிரயம் செய்ய வரவில்லை, எனவே கிரய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தாவா தாக்கல் செய்துள்ளேன்.

கிரய ஒப்பந்தத்தை எந்த பத்திரத்தின் அடிப்படையில் இந்த கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினேன் என்றால் என் பெயரில் உள்ள ஆவண எண்.463/2014 கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் கிரய ஒப்பந்தம்

போட்டேன். கிரய ஒப்பந்தத்தை 2 கிரய ஆவணங்கள் மூலம் நான் ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் ஆவண எண்.463/2014 மற்றும் 464/2014 ஆகிய இரண்டு எண்களில் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணங்கள் மூலம் உரிமையாகி எனது சுவாதீன அனுபவத்தில் இருந்த சொத்துக்களை கிரய ஒப்பந்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

கிரய ஒப்பந்த பத்திரத்தில் சொத்து விவரத்தில் 163/2014 என்ற ஆவணத்தில் புல எண்.183/3ஏ, இதன் புதிய உட்பிரிவு எண்.183/3ஏ3 இவைகளில் மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மனை நிலத்தில் ஏற்கனவே ஒப்பந்தம் செய்த மனை எண்.1, 13 மற்றும் 12 மனை நிலங்களை நீங்கலாக மீதம் உள்ள மனை நிலங்கள் 2, 3, 4, 10, 11, 14, 15,16,17,18,19,21,22,23 மற்றும் 24 மனை நிலங்கள் மட்டும் கிரய ஒப்பந்தத்திற்கு சம்மந்தப்பட்டது என்றால் சரி.

புல எண்.164/1சி–யில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் ஆவண எண்.463/2014 சொத்துக்குரிய சக்குபந்தியில் தவறாக காட்டி இந்த கிரய ஒப்பந்த ஆவணத்தை மோசடியாக 1ம் பிரதிவாதியை ஏமாற்றி ஏற்படுத்தி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவண எண்.463/2014ல் உள்ள சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. ஆவண எண்.463/2014ல் உள்ள சொத்து விவரங்களை சரியாக சொல்லமுடியுமா என்றால் சொல்ல முடியும்.

ஆவண எண்.464/2014 சர்வே எண்.164/1சி மொத்தம் 55½ செண்ட் என் பெயரில் கிரயம் ஆன சொத்து என்றால் இல்லை.

ஆவண எண்.463/2014ல் ஆவணம் எனக்கு கடந்த 2014ம் வருடம் பிப்ரவரி மாதம் 10ம் தேதியில் ஓமலூர் வட்டம், ராமமூர்த்தி நகர், ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நியூ இந்தியா எஜுகேனசனல் சொசைடியின் தற்கால தலைவரும் ஏ.கோவிந்தசாமி கவுண்டரின் குமாரருமான ராமலிங்கம் என்பவரிடமிருந்து சர்வே எண்.164/1சி–யில் 55½ செண்ட் நிலத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

ஆவண எண்.463/2014 மற்றும் ஆவண எண்.464/2014 இரண்டு ஆவணங்களும் என்னுடைய பெயரில் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை. பிளாட் எண்.1, 12, 13ஐ எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்தேன் என்றால் தெரியாது. கிரய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சியாக யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. சாட்சிகளை பிரதிவாதிதான் அழைத்து வந்தார். அதில் முதல் சாட்சியாக வெங்கடேசன் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரி.

2015ம் வருடம் 15 பிளாட்டுகளின் விலை என்ன என்றால் ரூ.15,00,000/– ஆகும். கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது ரூ,25,00,000/– விலை பேசி ரூ,20,00,000/– நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் அசல்

ஆவணத்தை ஒப்படைப்பதாக சொல்லி உள்ளேனா என்றால் சரியாக நினைவில்லை.

கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய போது ஆவண எண்.463/2014, மற்றும் 464/2014 ஆகிய இரு ஆவணங்களையும் நான் 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரி. அதன்பின்னர் சாட்சி தற்போது இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். அந்த இரண்டு அசல் பத்திரங்களையும் கொடுத்தற்கான காரணம் என்ன என்றால் ஆவண எண்.463/2014ல் 15 பிளாட்டுகள் தான் இருந்தது. அதனால் அசல் ஆவணத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டேன். கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியபோது இரண்டு அசல் ஆவணங்களை கொடுத்து ரூ.20,00,000/- பெற்றுக்கொண்டு ரூ,10,00,000/-க்கான தொகை 1ம் பிரதிவாதி வாதியிடம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மீதி, ரூ.10,00,000/-க்காக அன்றைய தினமே கடனுறுதி சீட்டு ஒன்றை எழுதி 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.